RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 355 | டிசம்பர்.25 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## இந்தியாவின் விண்வெளி பயணத்தில் பெருமைமிக்க மைல்கல்; பிரதமர் மோடி பாராட்டு



ஆந்திரா, டிச.25-

'புளூபேர்ட் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது, இந்தியாவின் விண்வெளி பயணத்தில் ஒரு பெருமைமிக்க மைல்கல்' என இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.ஆந்திரா மாநிலம், ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து நேற்று (டிசம்பர் 24) காலை 8.54 மணிக்கு எல்.வி.எம்., 3 ராக்கெட் வாயிலாக, 'புளூபேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் பாய்ந்தது. திட்டமிட்டப்படி துல்லியாக நிலை நிறுத்தப்பட்டது என இஸ்ரோ தெரிவித்தது.இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கைஇந்திய விண்வெளித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம். இந்திய மண்ணிலிருந்து ஏவப்பட்ட மிகப்பெரிய செயற்கைக்கோளான அமெரிக்காவின் 'புளூபேர்ட்' லிகஷிவி3வி6 ராக்கெட் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது இந்தியாவின் விண்வெளிப் பயணத்தில் ஒரு பெருமைமிக்க மைல்கல்லைக் குறிக்கிறது.வணிக ரீதியில் ராக்கெட்டுகளை ஏவுவதில், உலக சந்தையில் முக்கிய இடத்தை இந்தியா பிடித்துள்ளது. வளர்ச்சி அடைந்த மற்றும் தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவை நோக்கிய நமது முயற்சிகளின் பிரதிபலிப்பாகும். நமது கடின உழைப்பாளிகளான விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு வாழ்த்துக்கள். விண்வெளி உலகில் இந்தியா தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்திய இளைஞர்களால் இயக்கப்படும் நமது விண்வெளித் திட்டம் மிகவும் மேம்பட்டதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் மாறி வருகிறது. எல்.வி.எம்., 3 ராக்கெட் செயல்திறனை வெளிப்படுத்துவது வாயிலாக, ககன்யான் போன்ற எதிர்காலப் பணிகளுக்கான அடித்தளங்களை வலுப்படுத்துகிறோம். வணிக ஏவுதள சேவைகளை விரிவுபடுத்துகிறோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்

## வணிகர்களின் வேதனைக்குரல் உலுக்கியது: சொல்கிறார் ராகுல்



புதுடில்லி, டிச.25-

பெரிய நிறுவனங்களுக்கு தாராளம் காட்டி விட்டு, சிறு, குறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை முறையற்ற ஜிஎஸ்டி போன்றவற்றால் மத்திய அரசு கட்டிப்போட்டுள்ளதாக காங்கிரஸ் எம்பி ராகுல் குற்றம் சாட்டியுள்ளார். அவரது அறிக்கை: வைசிய சமூகத்தினருடனான வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தையின் போது, எங்களின் தொழில் சரிவின் விளிம்பில் இருப்பதாக அவர்களின் வேதனைக் குரல் உண்மையில் என்னை உலுக்கி விட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிற்கு பெரும் பங்களித்த இந்த சமூகம், தற்போது விரக்தியின் உச்சத்தில் இருக்கிறது. இது ஒரு அபாயத்திற்கான எச்சரிக்கை மணிபெரிய பெரிய நிறுவனங்களுக்கு தாராளம் காட்டி விட்டு, சிறு, குறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை முறையற்ற ஜிஎஸ்டி போன்றவற்றால் இந்த அரசு கட்டிப்போட்டுள்ளது. இது வெறும் கொள்கை தோல்வி அல்ல. உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் இந்தியாவின் எதிர்காலத்தின் மீதான நேரடி தாக்குதல். இது மன்னராட்சி எண்ணம் கொண்ட பாஜ அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், நாட்டு வர்த்தகத்தின் முதுகெலும்பாக இருக்கும் வைசிய சமூக மக்களுக்கு துணை நிற்பேன், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## விவசாயிகளின் வயிற்றிலடிக்கும் திமுக: நயினார் நாகேந்திரன் காட்டம்



சென்னை, டிச.25-

வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். அவரது அறிக்கை: டிட்வா புயலால் பாதிப்படைந்த அனைத்து டெல்டா விவசாயிகளுக்கும் பல வாரங்களாகியும் திமுக அரசு இன்னும் இழப்பீடு வழங்கவில்லை. பழுதடைந்த அரசு தானியக்கிடங்குகளாலும், கொள்முதல் செய்வதில் அரசு காட்டிய அலட்சியத்தாலும் தான் பல டன் நெல்மூட்டைகள் மழையில் நனைந்து முளைப்பு கட்டிப்போயின.

தங்களின் பல மாத உழைப்பு பாழாய்ப்போனதைக் கண்டு கலங்கி நிற்கும் விவசாயிகளுக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்லாமல், நெற்பயிர்களைப் பார்சலில் கொண்டு வந்து ஆய்வு செய்தார் முதல்வர். ஆய்வு செய்து பல வாரங்களாகியும் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகையை இன்னும் வழங்காமல் திமுக அரசு இழுத்தடிப்பது நியாயமல்ல.''நானும் டெல்டாகாரன்' என மேடையில் முழங்குவதை விட, ஏக்கருக்கு ரூ. 30,000 இழப்பீடு வழங்கி விவசாயிகளின் துயரத்தைத் துடைப்பது தான் சாலச் சிறந்தது என்பதை முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தகுந்த இழப்பீடு வழங்காமல் வஞ்சித்து வரும் திமுக அரசின் அலட்சியமே அக்கட்சியின் ஆட்சி அரியணைக்கு முடிவுரை எழுதப்போகிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்

# முதற்கட்டமாக 1,000 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நிரந்தரம்: தமிழக அரசு அறிவிப்பு




சென்னை: டிச.25-

“முதற்கட்டமாக 1000 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள். படிப்படியாக மீதமுள்ள ஒப்பந்த செவிலியர்களுக்கு பணி நிரந்தர ஆணைகள் வழங்கப்படும். அரசின் முடிவினை ஏற்று, ஒப்பந்த செவிலியர்கள் போராட்டத்தை முடித்துக் கொள்கிறார்கள்” என மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒப்பந்த செவிலியர்களின் போராட்டத்தை முடித்துவைத்து வெளியிட்ட அறிக்கையில், “மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யக் கோரி தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மேற்காணும் செவிலியர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒப்பந்த செவிலியர் சங்கங்களுடன் 19.12.2025 மற்றும் 22.12.2025 ஆகிய நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செவிலியர்களின் போராட்டம் குறித்து முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவரின் ஆலோசனையின் பேரில் மீண்டும் இன்று 24.12.2025 ஒப்பந்த செவிலியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தற்போது ஒப்பந்த செவிலியர்களாக பணிபுரிந்து வரும் செவிலியர்களை நிரந்தர பணியிடத்தில் பணி நியமனம் செய்யும்பொருட்டு, நிலுவையிலுள்ள பதவி உயர்வுகள் மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சுமார் 1000க்கும் மேற்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் விரைவில் நிரந்தர பணியிடங்களில் பணிநியமனம் செய்யப்படுவார்கள் என தெரிவித்தார்.

கடந்தகால ஆட்சியில் 2015ஆம் ஆண்டு பணிநியமனம் பெற்ற 6,395 ஒப்பந்த செவிலியர்களில், 1,871 செவிலியர்கள் மட்டுமே 2020 ஆம் ஆண்டு வரை பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால், தி.மு.க. ஆட்சி பதவியேற்ற 2021ஆம் ஆண்டு முதல் கடந்த நான்கரை வருடங்களில் 4,825 ஒப்பந்த செவிலியர்கள் படிப்படியாக பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு (2024) மட்டும் மொத்தம் 1,693 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த செவிலியர்கள் பணியில் சேரும்போதே அவர்கள் குறைந்தபட்சம் 2 வருடங்கள் பணிபுரிந்து, அதன் பின்னர் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கேற்ப அவர்கள் நிரந்தரப் பணியிடங்களில் பணியமர்த்தப்படுவார்கள் என்ற விவரம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இவ்வரசு பதவியேற்றதிலிருந்து எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் அதாவது, காலிப்பணியிடங்கள் மட்டுமல்லாது, அவ்வப்போது புதிய பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, அதன் மூலம் 4,825 ஒப்பந்த செவிலியர்கள் நிரந்தரப் பணியிடத்தில் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

இவைத் தவிர, கடந்த நான்கு ஆண்டுகளில் செவிலியர் பணியிடத்திலிருந்து செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 2 இடத்திற்கு 1,998 செவிலியர்களும், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 2 பணியிடத்திலிருந்து செவிலியர் கண்காணிப்பாளர் நிலை - 1 பணியிடத்திற்கு 465 நபர்களுக்கும், செவிலியர் பணியிடத்திலிருந்து செவிலியர் போதகர் நிலை - 2 பணியிடத்திற்கு 62 நபர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், செவிலியர்களின் நலனில் இவ்வரசு மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. அவர்களின் நலன் கருதி, கீழ்க்காணும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

தற்போது, செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதால், அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. ஆயினும் மகளிர் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட செவிலியர்களுக்கு ஒன்றிய அரசின் மகப்பேறு சட்டம், 1961இன் படி ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு தேசிய நலவாழ்வுக் குழும் வழியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இதற்கான அரசாணை வெளியிடப்பட உள்ளது.

கரோனா காலத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 3,260 செவிலியர்களில் பணியில் சேராத 390 பேர் நீங்கலாக, 2146 செவிலியர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டு, தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 724 செவிலியர்களுக்கும் விரைவில் பணி நியமனம் வழங்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றவுடன், ஒப்பந்த செவிலியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.14,000/லிருந்து ரூ.18,000/ ஆக மே2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூதிய உயர்வு ஒருசில ஒப்பந்த செவிலியர்களுக்கு சில நிர்வாக காரணங்களால் பெற இயலாமல் உள்ளனர் என அறிய வருகிறது. அவர்களுக்கு விரைவில் இவ்வூதிய உயர்வுத் தொகை கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அரசு மேற்கொண்ட நடவடிக்கைளின் காரணமாக ஒப்பந்த செவிலியர்கள் அரசின் முதற்கட்டமாக 1000 நிரந்தர பணியிடங்களில் ஒப்பந்த செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற அரசின் முடிவினை ஏற்று, தங்களது போராட்டத்தை முடித்துக் கொள்கிறார்கள்' என அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

## “என்னை எதிர்த்து அன்புமணி போட்டியிட்டால்.” ‘ரெடி’ என்கிறார் ஜி.கே.மணி




விழுப்புரம், டிச.25-

விழுப்புரத்தில் பாமக கவுரவத் தலைவர் ஜி.கே. மணி, நேற்று மாலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாமக மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் சேலத்தில் வரும் 29ம் தேதி நடைபெற உள்ளது.

4 ஆயிரம் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இப்பொதுக்குழுவை அரசியல் கட்சி தலைவர்கள் உற்று நோக்குகின்றனர். இதற்கான பொதுக்குழு இலச்சினையை இங்கு வெளியிடுகிறோம்.

‘இப்படிப்பட்ட பொதுக் குழுவை பாமக தலைமை அறிவிக்கவில்லை’ என அன்பு மணி சொல்லியிருப்பது அநாகரிகமானது. நாடே பாராட்டும் போராளியை (ராமதாஸ்) கொச்சைப் படுத்தி வருகிறார். அன்புமணிக்கு தலைவர் மற்றும் அமைச்சர் பதவி கொடுத்து ஆனந்த கண்ணீர் வடித்த ராமதாஸின் கண்களில், தற்போது வேதனை கண்ணீர் வடிகிறது.

பாமக தலைவராக அன்புமணியின் பதவிக் காலம் 2025ம் ஆண்டு மே மாதத்துடன் முடிந்த நிலையில், 2023ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரைதலைவராக நீடிக்கிறேன் என போலி ஆவணங்களை தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். தலைவராக இல்லாதவர், ‘நான் தான் கட்சி, நான்தான் தலைவர்’ என சொல்லி வருகிறார்.

பாமகவின் அடையாளம் ராமதாஸ்தான். அன்புமணியை சிலர் தவறாக வழி நடத்துகின்றனர். ராமதாஸால் உருவாக்கப்பட்டவர்கள், அவரது பெயரை குறிப்பிட்டு ஒருமையில் பேசுவதை கண்டிக்கிறோம். அவரது வயது என்ன..? அனுபவம் என்ன..? பாமக நிறுவனத் தலைவராக இருந்து, கட்சியை ராமதாஸ் வழி நடத்தி வருகிறார்.

2026ல் வெற்றி கூட்டணியை அமைப்பார். பாமக இடம்பெறும் கூட்டணிதான் ஆட்சியை அமைக்கும். 100க்கும் மேற்பட்ட தொகுதியில் பாமக வலிமையாக உள்ளது. அன்புமணியுடன் சென்றவர்கள் வருத்தப்படுகின்றனர், மன உளைச்சலில் உள்ளனர். திரும்பி வருவதற்கு சிலர் எங்களிடம் பேசி வருகின்றனர். ராமதாஸ் கைதான் ஓங்கி இருக்கும்.

தருமபுரியில், ‘ராமதாஸ்தான் ஆணிவேர்’ என்றோம். ‘அவர்தான் ஆல மரம்’ என விழுப்புரத்தில் கூறுகிறோம். கூட்டணி குறித்து பாமகவுடன் எந்த கட்சிகளும் பேசவில்லை. கட்சியில் தற்போது நெருக்கடி உள்ளது.

பாமக வாக்கு வங்கி, ராமதாஸ் பின்னால் உள்ளது. மாம்பழம் சின்னம் ராமதாஸுக்குதான் கிடைக்கும். பாமகவில் உள்ள பிரச்சினை குறித்து இருவரையும் சமாதானப்படுத்த அதிமுக, பாஜக தரப்பில் எதுவும் பேசவில்லை.

சினிமா துறையில் இருப்ப தால் சங்கத் தேர்தலில் தமிழ் குமரனை துணை முதல்வர் உதயநிதி ஆதரித்திருக்கலாம். அது தொழில். சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடும் தொகுதியில் அன்புமணி உட்பட யார் போட்டியிட்டாலும் போட்டியிட தயாராக உள்ளேன். நானும், எம்எல்ஏ அருளும் ராமதாஸுடன் இருப்பதால், எங்களை திமுகவின் ஆதரவாளர்கள் என அன்புமணி தரப்பினர் விமர்சிக் கின்றனர்.

இடஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் தியாகம் செய்த தியாகிகளின் சிவந்த மண் என்பதால், விழுப்புரத்தில் பாமக பொதுக்குழு இலச்சினையை வெளியிடுகிறோம். இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்வில் சேலம் எம்எல்ஏ அருள், மாவட்டச் செயலாளர் புகழேந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்



# கொட்டாரத்தில் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கன்னியாகுமரி, டிச. 25-

கன்னியாகுமரி மாவட்டம் 100 நாள் வேலை திட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கிய மத்திய அரசையும், துணை போகும் அதிமுகவையும் கண்டித்து திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் கொட்டாரம் சந்திப்பில் நடைபெற்றது.

இந்த ஆர்பாட்டத்துக்கு அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பா.பாபு தலைமை வகித்தார். அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் எம்.மதியழகன் முன்னிலை வகித்தார். கொட்டாரம் பேரூர் செயலாளர் எஸ்.வைகுண்ட பெருமாள் வரவேற்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விஜய் வசந்த் எம்.பி, குமரி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் கோபி பேரறிவாளன், அகஸ்தீஸ்வரம் ஒன்றிய மதிமுக செயலாளர் பாலசுப்பிரமணியம், மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் என்.தாமரைபாரதி, மாநில திமுக தொண்டரணி முன்னாள் துணை அமைப்பாளர் பால ஜனாதிபதி, ஆதி தமிழர் கட்சி தென் மண்டல பொறுப்பாளர் பாஸ்கரன், கன்னியாகுமரி நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், திமுக நிர்வாகிகள் டி.அரிகிருஷ்ணபெருமாள், ஹெச்.நிசார், காமராஜ், வினோத், இ.எம்.ராஜா, இளங்கோ, ஆல்வின் பிரபு, சின்னமுட்டம் ஷ்யாம், பாலசுப்பிரமணியம், கங்காதரன், சுதை சுந்தர், சுதாகர், பிரேம் ஆனந்த், காங்கிரஸ் நிர்வாகி அரிகிருஷ்ணபெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# வேலூர் காட்பாடி தனியார் கல்லூரியில் தேசிய முன்னாள் ராணுவ வீரர்கள் கட்சி சார்பில் நிறுவனத் தலைவரும் முன்னாள் ராணுவ வீரருமான சுரேஷ் செய்தியாளர்கள் சந்திப்பு

வேலூர், டிச.25-

வேலூர் மாவட்டம், காட்பாடி தனியார் பல்கலைக்கழக கல்லூரியில், முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கான ஓய்வூதிய குறைதீர்வு ஒரு நாள் முகாம் நடைபெற்றது. வேலூர் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் தொடர்பான குறைகள் கேட்டறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தேசிய முன்னாள் ராணுவ வீரர்கள் கட்சியின் நிறுவனர் சுரேஷ், வேலூர் மாவட்ட செயலாளர் ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய முன்னாள் ராணுவ வீரர்கள் கட்சி தலைவர், இலவச திட்டங்களின் பெயரில் மக்களின் வரிப்பணம் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும், ஊழல் மற்றும் லஞ்சம் அதிகரித்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார். முன்னாள் ராணுவ வீரர் களை அரசியல் களத்தில் உரிய மரியாதையுடன் கொண்டு வரவே கட்சி தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார். 2026 சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட உள்ளதாகவும், முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கட்சியில் இணைந்து ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.



# சென்னை செயிண்ட் தாமஸ் மவுண்ட் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற நேஷனல் ஐபி யாத்ரா மூலம் தொழில்முனைவோர் பயிற்சிப் பெற்றனர்

சென்னை, டிச.25-

சென்னை ஜிஎஸ்டி சாலை, செயிண்ட் தாமஸ் மவுண்ட் நடைபெற்ற நேஷனல் ஐபி யாத்ரா" மூலம் தொழில்முனைவோர் பயிற்சிப் 22 டிசம்பர் மற்றும் 23 டிசம்பர் 2025, நட்சத்திர விடுதியில் நடைபெற்றது

இதில் தொழில் முனைவோர்க்கான வர்த்தக முத்திரைகள், காப்புரி மைகள், பதிப்புரிமை, வடிவமைப்புப் பதிவு செய்வது மற்றும் கண்டறிவது ஆகியவற்றை பற்றியும் மேலும் புதிய தொழில்முனைவோர்கள் தங்கள் விளைபொருட்கள் தயாரிப்புப் பொருட்களை சந்தையில் அறிமுகம் செய்யவும், காட்சி படுத்தவும் தங்கள் தயாரிப்புப் பொருளை புதிய பரிமானத்திற்க்கு கொண்டுசெல்லவும் ஒரு வாய்ப்பாக எம்.எஸ்.எம்.இ தொழில் நுட்ப மேம்பாட்டு மையம்" எனும் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு தொழில் நுட்ப உதவிகள், பயிற்சி மற்றும் மேம்பாட்டு சேவை களை வழங்கும் மத்திய அரசின் நிறுவனத்தின் கீழ் இயங்கும் செயல்முறை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு மையம் பி பி டி சி ஆக்ரா வின், சென்னையில் இயங்கும் "ஐபிஎப்சி சென்னை" இரண்டு நாள் 22 டிசம்பர் மற்றும் 23 டிசம்பர் 2025 அன்று நடத்திய " நேஷனல் ஐபி யாத்ரா" வில் 100 க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்துக் கொண்டு "ஐ பி" பதிவு செய்தல், தங்கள் தயாரிப்புப்பொருட்களுக்கு முத்திரை, காப்புரிமை, பதிப்புரிமை, வடிவமைப்புப் பதிவு மற்றும் புவிசார் குறியீடுகளை பெருவதை பற்றிப் பயிற்சி எடுத்துக் கொண்டனர் . இதன் மூலம் அவர்கள் தங்கள் தயாரிப்புப் பொருட்களை அறிவுசார் சொத்துரிமை மூலம் எவ்வாறு காப்பது, புதிய சந்தையை அடைவது, அரசின் உதவி பெருவது, போன்றவற்றை அறிந்தனர் மேலும் 20 ஸ்டால்கள் மூலம் அவர்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தையில் காட்சி படுத்தினர். இதன் மூலம் அவர்கள் புதிய முதலிட்டாளர்கள் சந்தித்து தங்கள் தொழிலை பெருக்க உதவிகரமாக இருந்தது என்று குறிப்பிடத்தக்கது.






# ஆட்சிமொழிச் சட்ட வார விழாவினை முன்னிட்டு, ஆறாம் நாள் நிகழ்ச்சியான ஆட்சிமொழி குறித்து நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியினை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

சிவகங்கை, டிச.25-

சிவகங்கை மாவட்டம், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சிமொழிச் சட்ட வார விழாவினை முன்னிட்டு, ஆறாம் நாள் நிகழ்ச்சியான ஆட்சிமொழி குறித்து நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியினை நேற்று (24.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளினை நினைவு கூரும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில் 2025- 2026 ஆம் ஆண்டிற்கான ஆட்சிமொழிச் சட்டவார விழா 17.12.2025 முதல் 26.12.2025 வரை கொண்டாடிட திட்டமிடப்பட்டு, 17.12.2025 முதல் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக ஆட்சிமொழிச் சட்டவாரம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வாறாக நடைபெறும் நிகழ்ச்சிகளின் வாயிலாக, அரசுப் பணியாளர்களுக்கு கணினித்தமிழ், ஆட்சி மொழிச் சட்டம் வரலாறு, அரசாணைகள், மொழிப்பயிற்சி, சுற்றோட்டக் குறிப்புகள், செயல்முறை ஆணைகள், குறிப்பாணைகள், அரசு அலுவலகங்களில் பெயர்ப்பலகைகள் அமைத்தல் ஆகிய தலைப்புகளில் பேராசிரியர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகைள் 5:3:2 என்ற விகிதத்தின் அடிப்படையில் (தமிழ், ஆங்கிலம் மற்றும் பிறமொழிகள்) அமைத்திட வலியுறுத்தி வணிக நிறுவன உரிமையாளர்கள், வணிக நிறுவன அமைப்புகள் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் பங்கேற்கும் கூட்டமும், ஆட்சிமொழிச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்கும் பட்டிம ன்றமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆட்சிமொழிச் சட்டத்தை அறியும் வகையில் விளம்பரப் பதாகைகள் ஏந்தி அரசுப் பணியாளர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து ஆட்சிமொழித்திட்ட விளக்கக் கூட்டமும் ஆட்சிமொழி சட்ட வார விழாவின் பகுதியாக நடைபெறவுள்ளது.

2025 -2026 ஆம் ஆண்டிற்கான ஆட்சி மொழிச் சட்ட வாரத்தின் ஆறாம் நாள் நிகழ்வாக கல்லூரி மாணா க்கர்கள், பேராசிரி யர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் அமைப்பினர் ஆகியோர்களுடன் இணைந்து, தமிழ் சார்ந்த கிராமிய கலை நிகழ்ச்சிகளுடன் ஆட்சிமொழித் தொடர்பான பதாகைகள் ஏந்தி விழிப்புணர்வுப் பேரணி நடத்திடும் அடிப்படையில் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் ஆகியவைகளுடன் நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியானது, சிவகங்கை நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று சண்முகராஜா கலையரங்கம் அருகில் நிறைவு பெற்றது. இப்பேரணியில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப்பேரணியில், வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகைகளை தமிழில் வைக்க வலியுறுத்தி துண்டறிக்கைகள் வணிக நிறுவன உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டன.

இதனை தொடர்ந்து, பல்வேறு நிகழ்வுகள் துறை ரீதியாக தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, தமிழ் வளர்ச்சித்துறையால் நடத்தப்பெறும், ஆட்சிமொழிச் சட்டவார விழாவின் அனைத்து நிகழ்வுகளிலும் பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள், அரசு அலுவலர்கள், அரசுப் பணியாளர்கள், தமிழறிஞர் பெருமக்கள், தமிழ் அமைப்பினர், பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் சிவப்பிரகாசம், கல்லூரி மாணாக்கர்கள், பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ்ச்சங்கங்கள், தமிழ் அமை ப்புகள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பெரும்பாக்கத்தில் டாக்டர்., எம்.ஜி.ஆர். 38 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு அன்னதானம்

செங்கல்பட்டு, டிச.25-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்24.12.25 அன்று காலை 8 :00 மணிக்கு கழக அம்மா பேரவை துணைச் செயலாளர்., பரங்கிமலை தெற்கு ஒன்றிய செயலாளருமான., பெரும்பாக்கம், ராஜசேகர் டாக்டர்., எம்.ஜி.ஆர். 38 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்கள் அனைவருக்கும் சிக்கன் பிரியாணி அன்னதானம் வழங்கினார். உடன் அதிமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்..

# தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக தந்தை பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு வீரவணக்கம் செலுத்தினர்

திண்டுக்கல், டிச.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவருமான சாதியக் கொடுமைகள் மற்றும் சமுதாய பேதங்களோடு, பெண்ணடிமைத் தனத்தையும், மனிதர்களைத் தாழ்த்தும் மூட நம்பிக்கைகளையும் வேரோடு களையத் தொடர்ந்து போராடிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கார்த்திக் ஆலோசனைப்படி பழனி மின் அலுவலகம் அருகில் உள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி .பாலன் இணைச் செயலாளர் விஜய் சிவா நகரச் செயலாளர் மிதுன்மனோகரன் மற்றும் நகர ஒன்றிய பேரூர் கிளை சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக ஒன்றிய அரசு மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தை நீர்த்துப் போகும் வகையில் வாயில் நுழையாத விபிசி, ராம்ஜி என்று மாற்றியதைக் கண்டித்து திமுக மற்றும் தோழமைக் கட்சிகளின் (இந்திய கூட்டணி) கண்டன ஆர்ப்பாட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார் தலைமையில் சுப. மதியரசன், பி ஏ நஜுமுதீன், ஆறு.செல்வராசன், ரி.வெங்கட்ராமன், வே. தமிழ்மாறன் காங்கிரஸ் மாவட்ட குழு உறுப்பினர் ஆண்டுக்காளி சந்தியாகு, செல்ல பாண்டியன், ராஜு சிபிஐ(எம்), ஜேம்ஸ் வளவன் விசிக, மலைராஜ் சிபிஐ(எம்) சேக் இப்ராஹிம் மனிதநேய ஜனநாயக கட்சி, காஜா மைதீன் மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் துல்கருணை மூத்த உறுப்பினர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# பள்ளிக்கரணையில் பா.ஜ.க மற்றும் அதிமுக அரசை கண்டித்து100 நாள் வேலை வாய்ப்பு ஒலிக்கும் சட்டத்தை திரும்ப பெற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

பள்ளிக்கரணை, டிச.25-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை காலை 10 மணிக்கு 24.12.15 அன்று ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் எதிரில் திமுக சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர்., மா. சுப்பிரமணியன் தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., எஸ். அரவிந்த் ரமேஷ் ஏற்பாட்டில் சென்னை தெற்கில் 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் அ.தி.மு.க .வையும் கண்டித்தும் மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து கட்சி தலைவர்களும் பங்கேற்றுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஒன்றிய செயலாளர்., கோவிலம்பாக்கம், ஜி .வெங்கடேசன் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து கட்சி தலைவர்கள், தொண்டர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்ஜிஆருக்கு நினைவஞ்சலி

நிலக்கோட்டை, டிச.25-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பாக மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர்க்கு 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

நிலக்கோட்டை நால்ரோடு தபால் நிலையம் அருகில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் திருவுருவப்படத்திற்கு ஒன்றிய செயலாளர்கள் யாகப்பன் மற்றும் நல்லதம்பி தலைமையில் நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதயகுமார் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நிலக்கோட்டை முன்னாள் சேர்மன் வி வி எஸ் சேகர் முன்னாள் ஒன்றிய செயலாளர் தண்டபாணி, முன்னாள் சிலுக்குவார்பட்டி ஊராட்சி மன்ற செயலாளர் ஜெயசீலன் எத்திலோடு ராஜா மற்றும் நிலக்கோட்டை ஒன்றிய பொறுப்பாளர்கள் சார்பு அணி பொறுப்பாளர்கள் கிளைச் செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தென்னிந்திய அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் Merit Cup 2025 போட்டியில், பூவிருந்தமல்லி சைதன்யா பள்ளி, கிளை மாணவர்கள் தங்களின் அயராத உழைப்பு, உறுதியான மனவலிமை மற்றும் சிறப்புமிக்க திறமை ஆகியவற்றின் மூலம் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தைப் பெற்று வெற்றி வாகை சூடினர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டார். இந்த மகத்தான வெற்றியின் அடையாளமாக, பள்ளியின் முதல்வர் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் கோப்பையை பெற்றுக் கொண்டார் மாணவர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் வாழ்த்துகள் கொண்டனர்.




## பழனியில் தமிழ் புலிகள் கட்சியின் சார்பில் எஸ் ஐ ஆர் நடைமுறையை திரும்ப பெற கோரி கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், டிச.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இந்திய தேர்தல் ஆணையத்தால் நடைமுறையில் உள்ள எஸ் ஐ ஆர்_ ஐ திரும்ப பெற வேண்டும், திருப்பரங் குன்றம் மலையை வைத்து மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் சனாதான சக்திகளை கண்டித்தும் தமிழ் புலிகள் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ,காந்தி பெயரை மாற்றியதை கண்டித்தும், பழனி பகுதியில் வசிக்கும் பட்டியலின மக்களுக்கு பட்டா வழங்க வேண்டியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னதாக அருந்ததியர் மாணவர்களை கடுமையாக தாக்கிய சத்திரப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவநாதன் மற்றும் காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் புலிகள் மாவட்ட செயலாளர் இரணியன் தலைமை தாங்கினார் . மேலும் கார்த்திக் சுதன் ,சூர்யா ,அருந்தமிழன் ,சின்ன கருப்பன், வீரமணி, முருகானந்தம், முத்து விஜயன், காளிராஜ், திருவளவன் என கூட்டணி கட்சியை சேர்ந்த பொறுப் பாளர்களும் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக சார்பில் தந்தை பெரியாரின் நினைவு நாளை ஒட்டி அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சுப மதியரசன் பேரூர் செயலாளர் பி.ஏ நஜூமுதீன், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ்மாறன் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன் இளையான்குடி பேரூராட்சி துணைத்தலைவர் டி கே இப்ராஹிம் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன், ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் பைரோஸ் கான், கம்பன் காதர், சத்தியேந்திரன், கார் சாமி, முருகன், நீலமேகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





## இளையான்குடியில் அஇஅதிமுக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்

இளையான்குடி, டிச.25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடியில் அஇஅதிமுக கழக பொதுச் செயலாளர், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடியார் ஆணைக்கினங்க சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் PR.செந்தில் நாதன் அறிவுறுத்தலின்படி அஇஅதிமுக கழக நிறுவனத் தலைவர், பாரத ரத்னா, புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரின் 38ம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நேற்று செல்லுத்தபட்டது. பேரூர் கழக செயலாளர் M.A. நாகூர் மீரா தலைமை வகித்தார்

இளையான்குடி வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் K.M. கோபி, தலைவர் விருதுநகர் மண்டல தகவல் தொழில் நுட்ப பிரிவு, சிவகங்கை மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் K.குழந்தை முன்னிலை வகித்தனர்.

இளையான்குடி பஜாரில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 38ம் ஆண்டு நினைவஞ்சலி புரட்சித் தலைவர் திருவுருவப் படத்திற்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் எடப்பாடியார் தலைமையில் கழக ஆட்சி அமைந்திட கழக நிர்வாகிகள் அனைவரும் அயராது பாடுபட வேண்டும் என உறுதி மொழி எடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சிறுபான்மை பிரிவு இணை செயலாளர் O.M. மௌலானா செய்யது, பேரூர் அவைத்தலைவர் V.S.H.அபுபக்கர், மாவட்ட சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் M.செய்யது அன்சாரி, பேரூர் அம்மா பேரவை செயலாளர் H. செய்யது இபுறாகிம், பேரூர் எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் S.தாவூது பாட்சா, பேரூர் துணைச் செயலாளர் S.அபுல் கலாம் ஆசாத், பேரூர் கழக பொருளாளர் J.அப்பாஸ் அலி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு இணைச் செயலாளர் L.முருகன், பேரூர் சிறுபான்மை பிரவு செயலாளர் A.மீரான் கனி, வடக்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் ஜவஹர் என்ற குமார், மாவட்ட இளைஞர் பாசறை இணை செயலாளர் R.பாக்கியராஜ் வடக்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் K.கேசவன், பழக்கடை பழனிச்சாமி வார்டு செயலார்கள் R.அயூப்கான், M.முகம்மது மைதீன், வி.செல்வம், பூட்டு செய்யது அபுதாகிர், அமானுல்லா, தெய்வேந்திரன், அல்லாஹைர், அலிஅக்பர், இபுறாகிம்சா, இஸ்மத்இனூன், அப்துல் ரஜாக், கீழாயூர் செய்யது, அரசேந்திரன், கலில் அஹமது, கோஸ் அப்துல்காதர், நசீர் அகமது, லோகேஸ்வரன், கிளி, சங்கன் என்ற பாலு, ஆறுமுகம், காளீஸ்வரி, முனீஸ்வரி, பைசில் ரஹ்மான், திவான்முகம்மது, மணிக்குமார், சாதிக் அலி, மீரா உசேன் மற்றும் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு அஞ் சலி செலுத்தினர்..





## தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக தந்தை பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு வீரவணக்கம் செலுத்தினர்

திண்டுக்கல், டிச.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவருமான சாதியக் கொடுமைகள் மற்றும் சமுதாய பேதங்களோடு, பெண்ணடிமைத் தனத்தையும், மனிதர்களைத் தாழ்த்தும் மூட நம்பிக்கைகளையும் வேரோடு களையத் தொடர்ந்து போராடிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் கார்த்திக் ஆலோசனைப்படி பழனி மின் அலுவலகம் அருகில் உள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி .பாலன் இணைச் செயலாளர் விஜய் சிவா நகரச் செயலாளர் மிதுன்மனோகரன் மற்றும் நகர ஒன்றிய பேரூர் கிளை சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

## முடிச்சூரில் பூங்கா பணிக்காக ஒப்படைத்த 5 அடி நிலம் இன்று ஆக்கிரமிப்பு என்று நோட்டீஸ் ஒட்டப்பட்டதால் முடிச்சூர் விவசாயிகள் அதிர்ச்சி



செங்கல்பட்டு, டிச.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூர் ரங்கா நகர் பகுதியில் உள்ள சுமார் 6 ஏக்கர் 11 பெயருடைய விவசாய நிலம் குறித்து, அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கோபாலகண்ணன், புருஷோத்தமன், அரவிந்த் உள்ளிட்ட 11 விவசாயிகள் மூன்று தலைமுறைகளாக இந்த நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு முடிச்சூர் ஊராட்சிக்கு சொந்தமான குளம் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதனை முதலமைச்சர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இந்த பணிகளுக்காக, விவசாய நிலத்தின் ஓரமாக ஐந்து அடி அகலத்தில் தற்காலிகமாக வேலி அமைக்கப்பட்டு, “பணிகள் முடிந்தவுடன் அகற்றப்படும்” என்று அதிகாரிகள் விவசாயிகளிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஆனால் தற்போது அந்த ஐந்து அடி நிலம் அரசு நிலம் என்றும், அதை விவசாயிகள் ஆக்கிரமித்துள்ளதாகவும் கூறி இன்று காலை நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள், நிலத்தின் நுழைவாயிலை அடைத்ததால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தங்களது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

“அரசு பணிகளுக்காக தற்காலிகமாக விட்ட நிலத்தை இப்போது நிரந்தரமாக பறிக்க முயற்சி செய்வது அநியாயம். உடனடியாக தமிழக அரசு தலையிட்டு எங்கள் நிலத்தை மீட்டுத் தர வேண்டும்” என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்





## காளையார்கோவிலில் கிறிஸ்துமஸ் பெருவிழாவை முன்னிட்டு பயனாளிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் பகிர்வு விழா



காளையார் கோவில், டிச.25-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு பெருவி ழாவை முன்னிட்டு புனித வின்சென்ட் தே பவுல் சபையின் புனித அருளானந்தர் கிளைச் சபை சார்பாக தேவையில் இருப்போருக்கு புத்தாடைகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. தொடக்க செபம் லீமா ரோஸ் கூற டேனியல் ஜோசப் வாசகம் வாசித்தார். விந்செந்திய கையேட்டில் தத்துக்குடும்பம் குறித்து ராபர்ட் கருணாகரன் வாசித்தார். கிளைப் பொருளாளர் பால் ஜோசப் வரவேற்புரை ஆற்றினார். பங்குத்தந்தை ஆன்மீக ஆலோசகர் சேசு உதவிப் பங்குத்தந்தை நிக்கோலாஸ் ஆசியுரை வழங்கி தத்துக் குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவியாக சேலை வேஷ்டி கைலி நைட்டி சட்டை போர்வைகளை வழங்கினர். சிவகங்கை மத்திய சபை முதன்மை பணியாளர் பெர்னாட்ஷா சிறப்புரையாற்றினார். சூசையப்பர்பட்டணம் வட்டார சபை முதன்மை பணியாளர் அருள் வட்டார சபைப் பொருளாளர் ஜான் அந்தோணி வாழ்த்து வழங்கினர். கிளை முதன்மைப் பணியாளர் ஆரோக்கிய சாமி இயேசு கிறிஸ் துவின் பிறப்புச் செய்தி உலக மாந்தர் அனை வருக்கும் மகிழ்ச்சியை கொடுத்தது. பகிர்வு நம் வாழ்வின் வேதனையை குறைத்து மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. மனிதத்தை நிறைவாக்கி தெய்வீகத்தை மலரச் செய்யும். கடவுளிலே கருணை தன்னை காணலாம். அந்த கருணையிலே கடவுளையும் காண லாம் என்று தலைமையுரையாற்றினார். தேவையில் இருப்போருக்கு வின்செந்தியர்கள் புத்தாடைகள் வழங்கி மகிழ்ந்தனர். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கி உணவு பரிமாறப்பட்டது. கிளைச் செயலாளர் ஜோசப் இவ்விழா சிறப்பாக நடைபெற உதவிய துணை உறுப்பி னர்களின் குடும்பத்திற்கும் உணவு மற்றும் கேக் வழங்கிய குடும்பத் திற்கும் சிறப்பாக நன்றி கூறினார். துணைத் தலைவர் ஆரோக்கிய லூயிஸ் லெவே நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். உறுப்பினர்கள் லூர்துராஜ் சூசை அருள் குழந்தைதிரேஸ் புஷ்பம் சகாயராணி ரீட்டா மெர்சி அலெக்ஸாண்டர் துணை உறுப்பினர்கள் வேளாங்கன்னி ராஜதுரை சாந்திஆரோக்கியசாமி கலந்துகொண்டு சிறப்பித் தார்கள்.



## அறம் செய் அன்பு அறக்கட்டளையின் சார்பாக விவசாயிகள் தினம் கொண்டாடப்பட்டது

கம்பம், டிச.25-

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டியில் விவசாயிகளை கௌரவித்த அன்பு அறம் செய் அறக்கட்டளை. இன்றைய தினத்தில் விவசாய நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயிகளை கௌரவிக்கும் விதமாக அன்பு அறம் செய் அறக்கட்டளையின் நிறுவனர் சுருளிப்பட்டி அன்பு ராஜா மற்றும் அறக்கட்டளை உறுப்பினர் ரூபாஈஸ்வரி,வேல் சரண், மூத்த விவசாயிகள் ரமேஷ், மொக்கராஸ் விவசாயிகளை சந்தித்து விவசாய தின நல்வாழ்த்துக்கள் கூறி அவர்களை கௌரவிக்கும் விதமாக பச்சைத் துண்டு போர்த்தப்பட்டது, விவசாய பணியில் இருந்த 50க்கும் மேற்பட்ட பெண்களுக்கு வாழ்த்துக்களை கூறி பச்சை துண்டு வழங்கப்பட்டது.

இதில் அன்பு அறம் செய் அறக்கட்டளையின் நிறுவனர் விவசாயிகள் இடத்தில் பேசும்போது விவசாயமே நம் நாட்டின் பிரதான தொழில், இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம், ஒரு விவசாயி சேற்றில் கால் வைக்கவில்லை என்றால் அலுவலகங்களில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கும், சாதாரண குடிமகனுக்கும் சாப்பாடு இல்லாமல் போய்விடும் அதனால் விவசாயத்தையும்,விவசாயிகளையும் பாதுகாப்பது நமது கடமை மட்டுமல்லாமல், அரசின் ஒரு கடமையாக இன்று வரை இருக்கின்றது என்பதனை விவசாயிகள் முன் பேசப்பட்டது.

இந்த நிகழ்வில் கிருஷ்ணா வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆர் வி எஸ் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் கிராம தங்கள் பாடமாக கற்றுக் கொண்டனர்.




# ஆந்திராவிலிருந்து கடத்திவரப்பட்ட 25 மெட்ரிக் டன் எடை கொண்ட இரண்டு கம்புக்கல் லாரிகளை கனிமவளத்துறை மடக்கி பிடித்தனர்

## ஓட்டுநர்கள் தப்பி ஓட்டம்

வேலூர் டிச.25

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தாலுகாவில் ஆந்திரா மாநிலத்திலிருந்து பேர்ணாம்பட்டு ஆந்திரா எல்லை வழியாக TN 28 AE 7063 மற்றும் KA 49 1187 ஆகிய இரண்டு லாரிகளில் சுமார் 25 மெட்ரிக் டன் எடை உள்ள கம்புக்கல் ஏற்றுக்கொண்டு வந்த இரண்டு லாரிகளை கனிமம் வளத்துறை வேலூர் உதவி இயக்குனர் செண்பகவல்லி, தலைமையிலான குழுவினர் சோதனையின் போது, காவல் துறையினர் இரண்டு லாரிகளை மடக்கி பிடித்து சோதனை மேற்கொண்டபோது அதில் 25 மெட்ரிக் டன் எடை கொண்ட கம்புக்கல் இருந்தது கண்டறியப்பட்டது. வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர்கள் போலீசாரை கண்டவுடன் தப்பியுள்ளனர். பிடிபட்ட இரண்டு லாரிகளையும் பேரணாம்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்து இது குறித்து கடத்தி வந்த ஓட்டுநர்கள் யார்..? வாகன உரிமையாளர்கள் யார்...? என போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காவல்துறை வாகன ஏலம் அறிவிப்பு

சிவகங்கை, டிச.25-

சிவகங்கை மாவட்ட காவல்துறையில் முதிர்ந்த நிலையில் கழிவு செய்யப்பட்ட 17(06-Four Wheeler, 11-Two wheeler) காவல் வாகனங்களை பொது ஏலத்தில் ஏலமிட சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.சிவ பிரசாத், உத்தரவிட்டார். பொது ஏலமானது வருகின்ற 12. 1.2026 அன்று காலை 10.00 மணிக்கு சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற உள்ளது. ஏலத்திற்குண்டான காவல் வாகனங்கள் சிவகங்கை 08.00 பார்வைக்காக மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் 12/.2026 அன்று காலை மணி முதல் ஏலம் நடைபெறும் நேரம் வரை வைக்கப்படும். ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் 12/01/2026 அன்று காலை 06.00 மணி முதல் காலை 10.00 வரை ரூ.1000/ முன் வைப்பு தொகையினை செலுத்தி ஏலம் எடுக்க தங்கள் பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும்.மேலும் ஏலம் எடுத்தவர்கள், ஏலம் எடுத்த காவல் வாகனங்களுக்கு ஏலத்தொகை மற்றும் GST-(18%) விற்பனை வரியுடன் சேர்த்து 12.01.2026 அன்றே செலுத்தி விட வேண்டும்.மேலும் GST கணக்கு வைத்திருப்பவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என்பதனையும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.







# விளையாட்டு விழா கொண்டாட்டம்

ராமநாதபுரம், டிச.25-

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை கண்ணாடி வாப்பா சர்வதேசப்பள்ளியின் 12 வது விளையாட்டு விழாவானது 24.12.25 புதன்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக சேது பாஸ்கரா கல்வி நிலையத்தின் நிறுவனர் முனைவர் சேது குமணன் பங்கேற்றார் . பள்ளியின் நிறுவனர் செய்யது முகமது ஜலாஹுதீன் முன்னிலை வகுத்தார் .பள்ளியின் அறங்காவலர்களான டாக்டர் சதக்கத்துல்லா முனைவர் டாக்டர் முகமது அப்துல் காதர் உடன்

பள்ளி முதல்வர் பிரமோதா மேனன் தலைமை தாங்கினர் .வண்ணத்துப்பூச்சியின் சிறகைப் போல இளந்தளிர்களின் வரவேற்பு நடனம் , நமது பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் சீறும் சிலம்பாட்டம் ,கரகாட்டம் என வியத்தகு ஆற்றலை மாணவர்கள் வெளிப்படுத்தினர் . விழா நிகழ்வினை பள்ளி நிர்வாக அலுவலர் முகமது அன்சார் ஒருங்கிணைத்தார்.

# வேலூரில் கல்விக்கு உதவி, அனைத்து பண்டிகைகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கு நலதிட்டங்களை வாரி வழங்கும் சமூக உணர்வு மிகு சமூக ஆர்வலர் டாக்டர். ஏ.கே. டி.வி. எம்.சரவணன் மறைவு





வேலூர். டிச.25

வேலூரில், பாரதிய ஜனதா கட்சியில் வேலூர் மாவட்ட பட்டியல் அணி தலைவராக டாக்டர். ஏ.கே. சரவணன் பதவி வகித்து வந்தவர். இவர் நேற்று 24.12.2025 புதன்கிழமை காலை மாரடைப்பால் காலமானார். இவரது மறைவு நிகழ்ச்சிக்கு பாஜக தலைமை முக்கிய பொறுப்பாளர் கேசவ விநாயகம் ஜி, பாஜக மாநில பொதுச் செயலாளரும், வேலூர் மாநகர முன்னாள் மேயருமான கார்த்தியாயினி மற்றும் மாவட்டத் தலைவர் தசரதன் ஆகியோர் கலந்துகொண்டு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். இவருடன் வேலூர் மாவட்ட பல்வேறு அணி தலைவர்கள், மாநில பட்டியல் அணி துணைத் தலைவர் கே.ஜி.குட்டி உட்பட பி.ஜே.பி மாநில மாவட்ட பொறுப்பாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், இந்திய பத்திரிகையாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைந்த மாவட்ட தலைவரும் செய்தித்தாள்கள் செய்தி உதவி ஆசிரியருமான, சமூக ஆர்வலர் டாக்டர். ராஜ்பாபு, பத்திரிகையாளர்கள் சங்கத் தலைவர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர். மறைந்த ஏ கே எம் சரவணன் என்பவர் சமூக உணர்வுமிகு சமூக ஆர்வலர் ஆவர். ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களின் மனதில் இடம் பிடித்து அயராது சமூக சேவை செய்து சாதனை படைத்தவர். ஒவ்வொரு பண்டிகைகளுக்கும், ஜாதி மத பேதமின்றி கல்விக்கு உதவி, ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்மஸ், பொங்கல் தீபாவளி, ஆங்கில மற்றும் தமிழ் புத்தாண்டு, ஊரிலுள்ள குழந்தைகளின் பிறந்தநாள் விழா உள்ளிட்ட அனைத்து பண்டிகைக்கும் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலை, அரிசி, பருப்பு, பண்டிகைக்கு தேவையான மளிகை பொருட்கள் உள்ளடங்கிய தொகுப்பு உள்ளிட்ட நல திட்டங்களை வாரி வழங்கி வந்தவர் மறைந்தார்.

இந்த கிறிஸ்மஸ் முன்னிட்டு இன்று நலத்திட்ட உதவிகள் வழங்க இருந்த நிலையில் திடீரென மார்கழி திங்களில் புதன்கிழமை அதிகாலை மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்ற செய்தி பொதுவெளியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து உறவினர்கள் பொதுமக்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் நிர்வாகிகள் உட்பட அனைவருக்கும் இவரது இறப்பு குறித்து பெரும் இழப்பு மற்றும் ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கின்றனர். இவர் பத்திரிகை துறையிலும் பணியாற்றியவர், பத்திரிக்கையாளர் சங்க நலன் கருதி பல்வேறு பொறுப்புகளில், பொறுப்பு வகித்து நலிவடைந்த பத்திரிக்கையாளர்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி பத்திரிக்கையாளர்கள் வளர்ச்சிக்கும் செய்தியாளர்கள் வளர்ச்சிக்கும் பத்திரிகை துறை வளர்ச்சிக்கும் பல்வேறு பண உதவிகள் வழங்கி உதவி புரிந்து நலிவடைந்த பத்திரிக்கையாளர்களை உயர்த்தியவர் இவர். இதன் தொடர்ச்சியாக ஏ கே டிஜிட்டல் நெட்வொர்க் மற்றும் ஏ கே டிவியும் நடத்தி வந்துள்ளார்.

பொதுமக்களுக்கு ஏதுவாக சாலை விபத்துக்கள் நடக்காத வண்ணம் சமூக உணர்வோடு பொது இடங்களில் சுமார் 25 லட்சம் மதிப்புள்ள உயர்ரக கேமராக்களையும் பொருத்தி பொதுமக்களுக்கு அர்ப்பணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இறப்பு குறித்து வேலூருக்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# அசாம் மாநிலத்தில் பெரும் கலவரம் 2 பேர் உயிரிழப்பு; 58 போலீஸார் படுகாயம்



குவாஹாட்டி, டிச.25-

அசாம் மாநிலத்தின் கர்பி ஆங்லாங் பகுதியில் நேற்று 2வது நாளாக பெரும் கலவரம் ஏற்பட்டது. இதில் ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 58 போலீஸார் காயம் அடைந்தனர். இன்டர்நெட் சேவையும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பதற்றம் நிலவுகிறது.அசாம் மாநிலத்தில் கர்பி பழங்குடியினரின் அமைப்புகளின் தன்னாட்சி கவுன்சில் எல்லைக்கு உட்பட்ட அரசு மேய்ச்சல் நிலங்களில் பிஹார் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த பலர் குடியேறி உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கர்பி பழங்குடியினத்தவர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கு கர்பி ஆங்லாங்கின் பெலங்பி என்ற பகுதியில் கடந்த 2 வாரங்களாக பழங்குடியினர் 9 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.அவர்களின் உடல்நிலை மோசம் அடைந்ததை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை அவர்களை மருத்துவ சிகிச்சைக்காக போலீஸார் வலுக்கட்டாயமாக குவாஹாட்டிக்கு அழைத்துச் சென்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த பழங்குடியினத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், 2வது நாளாக நேற்று போராட்டம் நடைபெற்றதுகர்பி பகுதிகளில் இருந்த வாகனங்களை தீ வைத்து கொளுத்தினர். கடைகளில் இருந்து சமையல் காஸ் சிலிண்டர்களை வெளியில் போட்டு வெடிக்க செய்தனர். கலவரத்தை அடக்க வந்த போலீஸார் மீது அம்புகள் எய்தனர். கற்களை வீசியும் தாக்குதல் நடத்தினர். இதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. போலீஸார் கண்ணீர் புகை குண்டுகள் வீசி கும்பலை கலைக்க முயற்சித்தனர். இதில் 2 பேர் உயிரிழந்தனர்.அவர்களில் ஒருவர் கர்பி இனத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கரோனி மார்க்கெட் பகுதியில் பெங்காலி ஒருவர் உயிரிழந்துள்ளார். பொதுமக்களில் எத்தனை பேர் காயம் அடைந்துள்ளனர் என்ற விவரம் வெளியாகவில்லை. மேலும் ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 58 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். கலவரம் பெரிதானதால், கர்பி ஆங்லாங் மற்றும் மேற்கு கர்பி ஆங்லாங் ஆகிய 2 மாவட்டங்களில் இன்டர்நெட் சேவை துண்டிக்கப்பட்டது.






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161